பாடல் 2: வாழ்வே என் வழியே (திருவிருந்து)

இயல்: திரு.ராஜரத்தினம்
இசை: செல்வி.நிஷா
பாடியவர்கள்: ஸ்ருதி, அமுதினி சகோதரிகள்
இசை இயக்கம்: Fr..டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

வாழ்வே என் வழியே, நான் உனையே எப்போதும் நினைந்துள்ளேன்

வளமே என் நலமே, நான் எனையே உன் நினைவால் இழந்துள்ளேன்

உனக்காகத்தானே காத்துள்ளேன், உன்னைத்தானே எதிர்பார்த்துள்ளேன்

இயேசுவே என் இயேசுவே வாருமே நான் வாழனுமே

சரணம்

1.நிரந்தரம் என நான் நினைந்ததெல்லாம்

கண்முன்னே கணவாய்க் கலைந்ததென்ன?

உடன் வரும் பல காலம் என்றதெல்லாம்

என்முன்னே நிழலாய் மறைந்ததென்ன?

நிலையான நிம்மதி நீர்தானே (2)

இயேசுவே உனையே நம்பியுள்ளேன்.

சரணம்

2. உறுதுணை என நான் உணர்ந்ததெல்லாம்

நட்டாற்றில் கைநெகிழ்ந்தகன்றதென்ன!?

மலையென நம்பி நான் வியந்ததெல்லாம்

இல்லை நான் மடுவென மடிந்ததென்ன?

அகலாத அமைதி நீர்தானே (2)

இயேசுவே உனையே நம்பியுள்ளேன்.

This song is prepared for Iniya Ithayangal Whatsapp group and linked in www.manavai.com